இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

O.S. 206/2022

வா.சா. 2 - முத்துகுமாரன்

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 28.10.2025.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

பிரதிவாதிகள் டிரெஸ்டில் இருந்து எனக்கும் 50 சென்ட் சொத்து தந்தார்கள் அதை நான் விற்று விட்டேன் என்றால் சரிதான். வாதிக்கும் டிரெஸ்டில் இருந்து 50 சென்ட் சொத்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் என்னஎன்றால் 467/8 பி. சந்தாணம் பிள்ளைக்கு வழக்கு பட்டிகை சொத்தில் வீடு கட்டி அனுமதி கொடுததார்கள் என்று கூறியுள்ளேன் அதன் தேதி தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் வீடுகட்டி அனுமதி கொடுத்து தீர்மானம் போட்டார் கள் என்றால் அது பற்றி தெரியாது. வாடகை எவ்வளவு என்று தீர்மானித்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு வீடுகட்ட அனுமதி கொடுத்தற்கான ஆவணம் எதுவும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எந்நெந்த வருடங்களில் எவ்வளவு வாடகை வசூலித்தார்கள் என்பது குறித்து தெரியாது என்றால் 40, 50 வருடத்திற்கு முன்பாக ரூ. 5, 10 கொடுத்தார்கள் என்பது தெரியும் வருடம் தெரியாது. எந்தெந்த வருடங்களில் எவ்வளவு ரூபாய் கூட்டினார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் வாடகை கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை என்றால்சரிதான்.

வாதியின் தாயார் வழக்கு பட்டிகை சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடியான விபரம் தெரியுமா என்றால் அது தெரியாது. சந்தாணம் பிள்ளை எப்போது வீடுகட்ட ஆரம்பித்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சந்தாணம் பிள்ளையின் மனைவி வீட்டை எப்போது விரிவு படுத்தினார் எவ்வளவு செலவு செய்தார் என்ற விபரம்

தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. சந்தாணம் பிள்ளைக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு வாரிசுகள். சந்தாணம் பிள்ளையின் மக்களுக்கிடையே உடன்படிக்கை ஏற்பட்டதாக கூறியுள்ளேன் அது எந்த வருடம் என்றால் 2021. மேற்படி உடன்படிக்கை சம்மந்தமாக ஏதேனும் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சந்தாணம் பிள்ளையின் மக்களுக்காக எழுதியதாக கூறப்படும் உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி உடன்படிக்கை எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது யார் எழுதியது யார்யார் சாட்சி கையொப்பம் இட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்திற்கு வாதிக்கோ வாதியின் மக்களுக்கோ வாக்காளர் ஆட்டையோ, குடும்ப அட்டையோ கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி எவ்வளவு வருடமாக நாவல்காட்டில் தாமசிக்கிறார் என்றால் மூன்றரை வருடமாக வெளியூரில் இருப்பதாக தெரியும்.

டிரெஸ்டிற்கு சொந்தமான ஈத்தாமொழி ஊரில் இருந்து வெளியில் சென்று பல வருடம் ஆகிவிட்டது என்றால் சுமார் 3 வருடங்கள் தான் இருக்கும். வழக்கு பட்டிகை சொத்தில் ரேகா என்ற நபர் தாமசித்து வந்தார் அவரை வலுக்கட்டாயமாக வெளியேற்றி ஈத்தாமொழி காவல்நிலையத்தில வழக்கு பதிவு செய்யபட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ரேகா தாமசித்த விபரம் தெரியுமா என்றால் ரேகா யார் என்று எனக்கு தெரியாது. நான் டிரெஸ்டு சொத்தில் அல்லாமல் வெளியே வாடகைக்கு தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு வாதி மற்றும் அவரது தாயார் பஞ்சாயத்து வரி செலுத்திய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2 ஏக்கரில் வழக்கு பட்டிகை சொத்து 2 சென்ட் 750 சதுர லிங்ஸ் எந்த எல்லையில் இருக்கிறது என்றால் நடுப்பகுதியில் இருக்கிறது. அதனை தொடர்ந்து வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. நான்

தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் யார் எழுதியது என்றால் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. வழக்கறிஞரிடம் என்னை வாதி அழைத்து சென்றார் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு பட்டிகை சொத்தை வாதிக்கு  வேண்டும் என்ற கேட்டுள்ளார். நான் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை வாதி கூறி எனக்கு தெரியும். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**